# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# எட்டாம் பத்து

## பத்தாம் திருமொழி - வண்டார்
## திருக்கண்ணபுரம் 10

** வண்டார் பூ மாமலர் மங்கை * மண நோக்கம்
உண்டானே! * உன்னை உகந்து உகந்து * உன் தனக்கே
தொண்டானேற்கு ** என் செய்கின்றாய்? சொல்லு * நால் வேதம்
கண்டானே! * கண்ணபுறத்துறை அம்மானே! 1

பெரு நீரும் விண்ணும் * மலையும் உலகேழும் *
ஒரு தாரா நின்னுள் ஒடுக்கிய * நின்னை அல்லால் **
வரு தேவர் மற்றுளர் என்று * என் மனத்து இறையும்
கருதேன் நான் * கண்ணபுரத்துறை அம்மானே! 2

** மற்றும் ஓர் தெய்வம் உளதென்று * இருப்பாரோடு
உற்றிலேன் * உற்றதும் உன் அடியார்க்கு அடிமை **
மற்றெல்லம் பேசிலும் * நின் திருவெட்டெழுத்தும்
கற்று நான் * கண்ணபுரத்துறை அம்மானே! 3

பெண் ஆனாள் * பேர் இளம் கொங்கையின் ஆரழல் போல் *
உண்ணா நஞ்சுண்டு உகந்தாயை * உகந்தேன் நான் **
மண் ஆளா! வாள் நெடுங்கண்ணி * மதுமலராள்
கண்ணாளா! * கண்ணபுரத்துறை அம்மானே! 4

பெற்றாரும் சுற்றமும் * என்றிவை பேணேன் நான் *
மற்றாரும் பற்றிலேன் * ஆதலால் நின் அடைந்தேன் **
உற்றான் என்று உள்ளத்து வைத்து * அருள் செய் கண்டாய் *
கற்றார் சேர் * கண்ணபுரத்துறை அம்மானே! 5

ஏத்தி உன் சேவடி * எண்ணி இருப்பாரை *
பார்த்திருந்து அங்கு * நமன் தமர் பற்றாது **
சோத்த நாம் அஞ்சுதும் என்று * தொடாமை நீ
காத்தி போல் * கண்ணபுரத்துறை அம்மானே! 6

வெள்ளை நீர் வெள்ளத்து * அணைந்த அரவணை மேல் *
துள்ளு நீர் மெள்ளத் * துயின்ற பெருமானே! **
வள்ளலே! உன் தமர்க்கு என்றும் * நமன் தமர்
கள்ளர் போல் * கண்ணபுரத்துறை அம்மானே! 7

மாணாகி * வையம் அளந்ததுவும் * வாள் அவுணன்
பூண் ஆகம் கீண்டதுவும் * ஈண்டு நினைந்து இருந்தேன் **
பேணாத வல்வினையேன் * இடர் எத்தனையும்
காணேன் நான் * கண்ணபுரத்துறை அம்மானே! 8

நாட்டினாய் என்னை * உனக்கு முன் தொண்டாக *
மாட்டினேன் அத்தனையே கொண்டு * என் வல்வினையை **
பாட்டினால் உன்னை * என் நெஞ்சத்து இருந்தமை
காட்டினாய் * கண்ணபுரத்துறை அம்மானே! 9

** கண்ட சீர்க் * கண்ணபுரத்துறை அம்மானை *
கொண்ட சீர்த் தொண்டன் * கலியன் ஒலி மாலை **
பண்டமாய்ப் பாடும் * அடியவர்க்கு எஞ்ஞான்றும் *
அண்டம் போய் ஆட்சி * அவர்க்கு அது அறிந்தோமே 10

**அடிவரவு:** வண்டார் பெரு மற்று பெண் பெற்றார் ஏத்தி வெள்ளை மாண் நாட்டினாய் கண்டசீர் வங்கம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---